தமிழ்ச் சிட்டு

எல்லா நிலையிலும் உயர்வடை!

ஆரவார அரசியல் நிலைகள்;
　　ஆடம்பரப் போலிமை வாழ்க்கை;
ஈரமிலாத மக்கள் மனநிலை;
　　எடுத்தெறிந்து பேசும் பேச்சுகள்;

பொய்,புரட் டான வாணிகம்;
　　பூசல்கள் நிறைந்த உறவுகள்;
கையூட்டுக் கல்வி! ஆட்சிகள்;
　　கயமை நிறைந்த கலைகள்;

இவைதாம் இன்றைய உலகம்!
　　இருப்பினும் சோர்வடை யாதே!
எவை உயர் வானவை எண்ணிவா,!
　　எல்லா நிலையிலும் உயர்வடை!

கரடுமுரு டான மலையிலும்
　　காவளம் கனிவளம் காணலாம்!
திருடரும் மாந்தரே! என்னினும்
　　மாந்தர் அனைவரும் திருடரா?

குரல் : 21
இசை : 4

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

விலை:
உருபா : 1-00

தெரிந்து கொள்ளுங்கள்

○ மீன் வகைகளில் மடவை மீன், என்றொரு வகை மிகவும் சாரம் மிக்கதாகவும், தரத்தில் சிறந்ததாகவும், உணவுக்கு மிக ஏற்றதாகவும் உள்ளதென ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இம் மீனில் உண்பதற்கு ஏற்ற பகுதி 73 விழுக்காடாகும். இதில் 19.1 விழுக்காடு புரதமும். 2.1 விழுக்காடு மாவுச்சாரமும், 7.8 விழுக்காடு கொழுப்பும் உண்டு. மேலும் இதில் 155 கலோரி ஆற்றலும், 1.1 விழுக்காடு மூல உரச்சாரமும் உள்ளன. மேலும் 357 அ.மா. இரும்புச்சாரமும், 177 அ.மா. கந்தகமும் 44 அ.மா. இரும்புச்சாரமும் உள்ளனவாம். எனவே இம் மீன் மிகுந்த சாரம் (சத்து) மிக்கது என்பது அவர்கள் கருத்து. (அ. மா—அயிர மாத்திரி (மில்லிகிராம்)

○ முத்துகள் பளபளப்பான பால் நிறத்தில் மட்டுந்தாம் உள்ளன என்று பலரும் நினைத்துக் கொண்டுள்ளனர். இந்தியாவில் தங்க நிறம், மஞ்சள் நிறம், தந்த நிறம், வெளிர் சாம்பல் ஆகிய நிறங்களிலும், சப்பான் சீனு போன்ற நாடுகளில் கருப்பு, நீலம், மஞ்சள் நிறங்களிலும் முத்துகள் கிடைக்கின்றன.

○ ஒலிகள் ஒலிச்செறிவு (Idensity of sound) என்னும் அளவில் குறிக்கப் பெறுகின்றன. அதன் அளவி டெசிபெல்(db) என்று கூறப் பெறுகிறது. சருகுகள் காற்றிலே சலசலக்கும்போது 10 டெசிபெல். நாம் முணுமுணுத்துப் பேசுவது 20 டெசிபெல். உரக்கப் பேசும் ஒலி 70 டெசிபெல். பேருந்து எழுப்பும் ஒலி 80 டெசிபெல்: பட்டாசு வெடி 100 டெசிபெல். வானூர்தியின் உரத்த ஒலி 140 டெசிபெல்.—என அளவிட்டிருக்கிறார்கள். நம் செவிகளின் இயல்பான ஒலி ஏற்புத்திறன் 60 டெசிபெல் தான். எனவே 60 டெசிபெலுக்குக் கூடுதலான ஒலிச்செறிவு நம் செவிகளுக்கு ஊறு தருவனவாகக் கூறப்பெறுகிறது. அதிகமான ஒலிகளால் நம் நெஞ்சம் வேகமாக இயங்கிப் பலவகையான நோய்களை நமக்கு உண்டாக்குகின்றன. உயர் குருதி அழுத்தம், குடல் அழற்சி, நரம்புத் தளர்ச்சி, ஒவ்வாமை (Alergy) முதலிய நோய்கள் ஏற்படுகின்றன.

பல்வேறு ஒலி நிலைகளை அறிவியலறிஞர்கள் கீழ்வருமாறு அளவீடு செய்துள்ளனர்.

(1)	உணரக் கூடிய அல்லது கேட்கக் கூடிய ஓசை (Audible)	1—10	டெசிபெல்
(2)	மிக அமைதியான ஒலி (Very quiet)	10—30	,,
(3)	அமைதியான ஒலி (Quiet)	30—70	,,
(4)	பொதுவான ஒலி (Moderately loud)	50—70	,,
(5)	அதிக ஒலி (Very loud)	75—100	,,
(6)	தாங்க இயலா ஒலி (Uncomfortabe loud)	100—120	,,

○ தமிழில் ஈ, தா, கொடு என்னும் மூன்று சொற்களும் ஒரு பொருளை ஒருவனிடமிருந்து கேட்டுப் பெற்றுக்கொள்ளும பொருளைத் தருகின்றன. எனினும் இலக்கண முறைப்படி, ஒரு பொருளைத் தன்னை விட, கல்வி, அறிவு அகவை, செல்வம், பதவி முதலியவற்றால் உயர்ந்தவர்களிடமிருந்து கேட்கும் பொழுது ஈ, ஈயுங்கள், ஈக, என்னும் சொற்களாலும், தன்னை ஒத்தவனிடமிருந்து பெறும் பொழுது தா,

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம்
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே !

குரல்: 21] (தி.பி-2021) நளி-துலை (நவ-திசம் 90') [இசை-4

சூழ் நிலைகள் பற்றிக் கவலைப்பட வேண்டாம்!

மக்கள் அமைப்பு இயற்கையிலேயே ஐந்து கூறுகளைக் கொண்டது. நாம் ஒவ்வொருவரும் அந்த ஐந்து கூறுகளைக் கொண்டே இயங்கி வருகிறோம். உடலியல் கூறு, உயிரியல் கூறு, மனவியல் கூறு, அறிவியல் கூறு, சூழ்வியல் கூறு—என்பன அவை.

இவற்றுள், உடலியல் கூறு என்பதில் நம் உடலின் தன்மைகள் அஃதாவது உடலமைப்பு முழுவதும் அடங்கி விடும். உடலின் வன்மை, மென்மை, உயரம், பருமன், உறுப்புகளின் அமைப்பு, நிறம், அழகு முதலிய அனைத்துக் கூறுகளும் உடலியல் கூறுகளே! இவை பிறவியிலேயே அமைவன. நம் வாழ்வின் ஐந்தில் ஒரு பகுதி உடல் தன்மைகளால் உருவாகி விடுகிறது.

இனி, இரண்டாவது கூறு ஆகிய உயிரியல் கூறு என்பது, நம் பிறப்புக்குக் காரணம் ஆகிய உயிரின் தன்மை ஆகும். சிலர் உயிர் என்பது தனியாக ஒன்றில்லை என்று கருதுகிறார்கள். அது தவறு. அறிவியல் தன்மைகளை மட்டுமே உண்மை என்று நம்புபவர்களும், அதனைச் சரியாக உணராதவர்களுமே, உயிர் என்பது ஒன்றில்லை என்று நினைக்கிறார்கள்.

இவ்வுலகில் பார்க்கப் பெறும் உண்மை, கேட்கப் பெறும் உண்மை, நுகரப் பெறும் உண்மை, சுவைக்கப் பெறும் உடலுணர்வு உண்மை, அறிவால் அறியப் பெறும் உண்மை, மனத்தால் உணரப் பெறும் உண்மை என்று பல உண்மைகள் உள்ளன. அவற்றுள் உயிர் இருப்பது மனத்தால் உணரப் பெறும் உண்மை. மன நுண்மை வளர வளரத்தான் அவ்வுண்மை துலங்கித் தோன்றும். இதற்கு இந்தத் தோன்றும் என்னும் சொல்லே சான்று. தெரியாமல் இருப்பது தெரிவதற்குத் தான் தோன்றும் என்று பெயர். உயிரில்லை என்பது தெரியாமல் இருக்கும் நிலை. உயிர் உண்டு என்பது தெரிகின்ற நிலை. இஃது இவ்வளவில் நிற்கட்டும்.

இனி, உயிரியல் கூறு என்ன என்பதைத் தெரிந்து கொள்வோம். உயிரியக்கம் தொடங்கும் பொழுது, அஃதாவது உடலின் கருவுயிர்ப்பின் பொழுது, நம்மைச் சுற்றியுள்ள இக் கதிரவன்

மண்டலத்தின் இருப்பு நிலைகள் என்னென்ன வகையாக அமைந்துள்ளனவோ, அவற்றுக்கேற்றபடி அமைகின்ற உயிரின் தன்மைகளே உயிரியல் கூறு ஆகும். அவை, இவ்வுயிரின் நீடிய அல்லது குறுகிய வாணுள் தன்மை,அ'து இப் பருப் பொருள் உலகில் நுகர வேண்டிய இன்ப துன்ப நிலைகள்,தொடர்பு நிலைகள், ஆக்கங்கள், தாக்கங்கள் முதலியவை உள்ளடங்கியனவாகும்.

அடுத்து, மூன்ருவதாக உள்ள மனவியல் கூறு என்பது அவ்வுயிரியல் தன்மையில், வந்து பொருந்திய மனவியல் பரப்பில் ஏற்படும் மாற்ற ஏற்றங்கள், உணர்வெழுச்சி அடங்கல்கள், ஆசை பாச உணர்வுகள், ஒட்டு உறவு உணர்வுகள் முதலியவை யாகும். இவை விரிக்கில் பெருகும் ஆகலின் சுருங்கச் சொல்லப் பெறுகின்றன.

நான்காவதான, அறிவியல் கூறு என்பது, நாம் உலகத்திேேடு கொள்ள வேண்டிய வாழ்வியல் முயற்சிகள் பற்றிய அனைத்து அறிவுத் தன்மைகளும் ஆகும், நாம் உண்பது,உடுப்பது, உறைவது, துய்ப்பது எனும் எல்லா முயற்சிகளுக்கும் ஆன அறிவு விளக்கங்களாகும். அரசியல், பொருளியல், குமுகவியல், கல்வி, தொழில் போலும் பல்வேறுபட்ட முயற்சிகளும் இதனுள் அடங்கும்.

இனி, இறுதியானதும், ஐந்தாவதும் ஆகிய சூழ்வியல் கூறு என்பது, நாம் இவ்வுலகில் பிறந்துள்ள குடும்பம், இனம், நட்பு, ஊர், நாடு, உலகம் இவற்றின், தாக்க ஆக்கங்களால் நமக்கு ஏற்படும் வாழ்வியல் மாறுதல்கள் அகும்.

—ஆக இவ்வைந்து வகையான இயற்கைக் கூறுகளின் இயக்கத்தையே நாம் நம் வாழ்வியல் என்று கூறுகிறேம். இவ்வைந்து கூறுகளில் ஒவ்வொன்றும் கூடவும் குறைந்தும் இயங்குகின்ற தன்மைக் கேற்பவே நாம் இயங்குகின்றேம். எனினும், நம் ஐந்து கூறுகளில் சூழ்வியல் கூறுகளையே நாம் மிகுதியாக உணர்கிறேம். அதனுலேயே மிகுதியும் தாக்கப் பெறுவதாக எண்ணுகிறேம். எனவே அதற்கே நாம் அதிகமாக மதிப்புக் கொடுக்கிறேம். நமக்கு வரும் நிலைகளுக்கெல்லாம் சூழ்வியலையே பெரும்பாலும் காரணம் காட்டுகிறேம். எதற்கும் சூழ்வியலை (சூழ் நிலையைக்) குறை கூறுகிறேம்; அதற்காக நொந்து கொள்ளுகிறேம்.

உண்மையில் நம் வாழ்வியலில் சூழ்வியல் என்பது ஐந்தில் ஒரு பங்கே! மீதியுள்ள நான்கு கூறுகளும் வலிந்திருக்குமானுல் நம வாழ்வியல் சூழலை நாமே உருவாக்கிக் கொள்ள முடியும் என்பதை நாம் சிந்திக்க முடிவதில்லை. ஏனெனில் அக் கூறுகளைப் பற்றி நாம் அறிந்திருக்கவில்லை. எந்த உலகியல் நூலிலும் அவை பற்றி விளக்கமாக ஒரே இடத்தில் ஒரே முறையில் சொல்லப் பெற்றிருக்கவில்லை. எனவே, அவை பற்றி நாம் அறிய விரும்பினுலும் நம்மால் அவற்றை உடனடியாகவோ, ஒரே நிலையிலோ அறிய முடிவதில்லை.

ஆகவேதான் நமக்குச் சூழ்வியல்(சூழ்நிலை)மிகவும் பெரிதாக; வலிவுடையதாகப் படுகிறது. அதைப் பார்த்து நாம் அஞ்சுகிறோம், மருள்கிறோம்; கவலைப் படுகிறோம். அதை நமக்கு வெல்லத் தெரிவதில்லை; எதிர்க்கத் தெரிவதில்லை; அதை மீறத் தெரிவதில்லை; அதைத் தாண்டிப் போக நாம் அஞ்சுகிறோம்; தயங்குகிறோம்: மயங்குகிறோம். பொதுவாக, பிற நான்கு கூறுகளையும் சேர்த்தே நாம் சூழ்வியல் என்று கருதிக் கொள்கிறோம். அல்லது அந் நான்கு கூறுகளையும் பிரித்துணரத் தெரியாமலேயே நாம் அவையனைத்தையும் சூழ்வியல்(சூழ்நிலை) என்று சொல்லிக் கொள்கிறோம்; எதற்கெடுத்தாலும் நாம் சூழ்நிலை, சூழ்நிலை என்று அரற்றிக் கொள்கிறோம். நம் தவறுகளுக்கும், முயற்சியின்மைக்கும், அறியாமைக்கும் நாம் சூழ்நிலையைக் காரணங்காட்டித் தப்பித்துக் கொள்கிறோம்; அல்லது நம்மையே ஏமாற்றிக் கொள்கிறோம்.

சூழ்நிலை(சூழ்வியல்)என்பது, நாம் மாற்றிக் கொள்ளத்தக்கதும் ,மீறத் தக்கதும், வெல்லத் தக்கதும் விடுவித்துக் கொள்ளத் தக்கதும் ஆகும். இன்னுஞ் சொன்னால்,நம் வாழ்வியல் கூறுகளாகிய ஐந்திலும், நாமே அமைத்துக் கொள்ளத்தக்கதும் தவிர்க்கத் தக்கதும் ஆன கூறே சூழ்வியல் கூறுதான். அடுத்தபடி மாற்றிக் கொள்ளத்தக்க கூறு உடலியல் கூறு ஆகும்; அடுத்தடுத்துள்ள கூறுகளில் மாற்றிக் கொள்ளக் கொஞ்சம் கடினமானது அறிவியல் கூறு; இதையும் மாற்றிக் கொள்ள இயலும்; ஆனால் கடினம். இனி, இதை விட, மாற்றிக் கொள்ள மிகக் கடினமானது மனவியல் கூறு. இதைவிட உயிரியல் கூறு மாற்றவே இயலாதது. பிறப்பு மாற்றத்தால்தான் உயிரியல் கூறை மாற்ற முடியும்.

இனி, இந் நிலைகளையெல்லாம் மிக மிக விரிவாகக் கூற வேண்டுமானால், இக் கட்டுரைப் பல பக்கங்களாக விரியும்; அவ் விரிவு இங்குத் தேவையில்லை.

இங்கே நாம் கூற வந்தது, மாற்றிக் கொள்ள இயன்றதும், எளிதானதுமான சூழ்வியல்(சூழ்நிலைக்)கூறை, நாம் நம் முயற்சித் தடைகளுக்கும் எழுச்சியின்மைக்கும் காரணமாகக் கூறிக் கொண்டு நம் வாழ்வியலைச் சிறப்பற்றதாக ஆக்கிக் கொள்ளக் கூடாது என்பதுதான்.

நம் குடும்ப நிலையாகட்டும், உலக நிலையாகட்டும் நம்மை எதுவும் நம் வாழ்வியல் போங்கிலிருந்து தடுத்து விடவோ மாற்றி விடவோ அழித்து விடவோ முடியாது. எனவே நம்மை நாமாக வைத்துக் கொள்வதிலிருந்து, வளர்த்துக் கொள்வதிலிருந்து, இவ் வுலகியல் சூழ்வுநிலைகள் எதுவும் என்னவும் செய்து விட முடியாது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஊழி பெயரினும் தான் பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார்! *(989)*

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. *(124)*

நபிகள் நாயகத்தின் பின்பற்றத் தகுந்த வாழ்க்கை!

இசுலாம் என்பது ஒரு வழி; வாழும் வழி. அதைச் சொல்வது தான் இசுலாம்; வாழும் வழியை வாழ்ந்துகாட்டியவர் நபிபிரான்.

நபி பெருமானார் தம் செய்தியை மக்கள் குலத்திற்கு வழங்குகையில், 'எனக்குப் பின்னால் இரண்டை விட்டுச் செல்கிறேன். ஒன்று திருக்குர்ஆன்; இன்னொன்று என்னுடைய வாழ்க்கை. திருக்குர்ஆனும், என்னுடைய வாழ்வும் எனக்குப் பின்னால் நீங்கள் வாழ்வதற்குப் பயன் படுத்த வேண்டியவை.—இப்படி நபி பெருமானார் தெளிவாகச் சொல்லிவிட்டுச் சென்றுள்ளார்கள்.

நபி பெருமானார் இறைத் தூதராக வந்து மக்கள் குலத்திற்கு மாந்த நேயத்தைப் புகட்டினார்கள். மாந்தராகவே வாழ்ந்து சென்றார்கள். அரேபிய நாட்டு அதிபதியாக வாழ்ந்த போதும் மாந்தராகவே வாழ்ந்தார்கள். போர்க்களத்தில் வெற்றிகளை ஈட்டியபோதும் மாந்தராகவே வாழ்ந்தார்கள்...அவர்கள் ஒரு மாந்தராக, ஏழையாக, உலகத்தில் வாழ்க்கையைத் தொடங்கி, மாந்தராக வாழ்ந்து, மறைகிறபோதும் எந்தச் சொத்தையும் வைத்து விட்டுப் போகவில்லை...குழந்தையாக சிறுவராக வாழ்ந்த போதே நல்லியல்போடு வாழ்ந்தவர்கள் அவர்கள். அல் அமீன், அஃசாதிக் என்னும் பெயர்களை அவர்கள் பெற்றிருந்தார்கள். இவற்றுக்கு வாய்மையாளர், நம்பிக்கையாளர் என்று பொருள்.

அரேபிய நாட்டு அதிபதியாக அவர்கள் வாழ்ந்தார்கள். வாழ்ந்து மறைகிற போது கூட அவர்கள் ஒரு பொதுவான ஈச்சம் பாயில் தான் படுத்திருந்து உயிர் விட்டார்கள். ஒட்டுப் போட்ட சட்டையைத்தான் அப்போதும் அணிந்திருந்தார்கள். அந்த இறுதி நேரத்தில் கூட, அவரைச் சுற்றியிருக்கிற நண்பர்களிடம் அவர்கள் கேட்டார்கள். "நான் யாருக்கேனும் தர வேண்டியுள்ளதா"—என்று.

பக்கத்திலிருந்தவர்கள் சொன்னார்கள்: "நீங்கள் யாருக்கும் கடனாகத் தர வேண்டியதில்லை; ஆனால், யாரோ ஒருவருக்கு நீங்கள் மூன்று திர்காம்கள் (அன்றைய அரபு நாட்டு நாணயம்) அன்பளிப்பாகத் தருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள்; ஆனால் அது நீங்கள் செலுத்த வேண்டிய கடன் அன்று"—என்று.

ஆனால் நபி அவர்கள் "நான் கொடுப்பதாகச் சொன்னதும் ஒருவகையில் கடன் போன்றதே! எனவே உடனே அதைத் தந்து விடுங்கள். நான் கடனாளியாக இறைவனைச் சந்திக்க விரும்பவில்லை' என்றார்கள். இது, நபி அவர்கள் தாம் மறைந்த பொழுதும் எப்படிக் கடமை உணர்வோடு இருந்தார்கள் என்பதைக் காட்டுகின்றது.

நபிகள் நாயகம் கல்வி கல்லாதவர்கள்; எழுத்தறிவில்லாதவர்கள். ஆனாலும் பிறர் கல்வி கற்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் உள்ளவர்கள்;

அவர்கள் அரபு நாட்டு அதிபராக இருந்தபொழுது, பத்ருப் போர் நடந்தது. அப்போரில் பிடித்து வரப்பட்ட போர்க் குற்றவாளிகளைப் பார்த்து, 'இங்கு யார் யாருக்கு எழுதப் படிக்கத் தெரியுமோ, அவர்கள் எல்லாரும் இங்குள்ள எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்பித்துக் கொடுத்தால் அவர்களுக்கு விடுதலை' என்றார்கள்; தளையாளிகள் (கைதிகள்) விடுதலையாவதற்கு அவர்களுடைய கல்வி துணையாகிறதற்கு நபிகள் வழி வகுத்துக் கொடுத்தார்கள்; சிறையாளிகளாக இருப்பவர்களுடைய கல்வியைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினார்கள் என்றால் அவரை எழுத்தறிவில்லாதவர்கள், பாடம் பயிலாதவர்கள் என்று சொல்ல முடியுமா?

இவை மட்டுமல்ல; அந்தக்காலத்தில் அரபு நாட்டின் பள்ளிவாசலையே, நபிகள் நாயகம் பாடசாலையாக நடத்தி வந்தார்கள்; பள்ளிவாசலில் தொழுகை, வழிபாடு முடிந்ததும் கல்வி கற்பிக்கப் பெறும். பகலில் கற்க முடியாதவர்கள் மாலை நேரத்தில் வந்து கற்கலாம் என்று, உலகில் முதன் முதலில் மாலை நேரக் கல்லூரியை ஏற்படுத்தியவர்கள் நபிகள் நாயகம். பகலெல்லாம் உழைத்தவர்கள் இரவில் அங்கு வந்து கல்வி கற்க ஏற்பாடு செய்தார்கள். இவ்வாறு அவர்கள் கல்வியைக் கற்பித்தார்; அறிவைப் போற்றினார். 'இழந்த ஒரு பொருளைத் தேடுவதைப் போல் கல்வியைத் தேட வேண்டும்' என்பது அவருடைய அறிவுரை.

எந்தத் தொழிலையும் ஒழுங்கோடும் நேர்மையோடும் செய்ய வேண்டும் என்பது நபிகளின் கொள்கை. 'ஒரு பொருளை வாங்கும் போது ஒரு குன்றிமணியளவு குறைத்து வாங்குவதும், கொடுக்கிற போது ஒரு குன்றிமணியவு சேர்த்துக் கொடுப்பதுமே சிறந்த வாணிகம்' என்பது அண்ணலாரின் அறிவுரை;

அண்ணல் எம்பெருமானார் சிறுவர்களைக் கண்டாலும் கூட தாமே முதலில் வணக்கம் (சலாம்) தெரிவிப்பார்கள்; கூட்டத்தில் உட்காருகிறபோது கூட முன் வரிசையில் வந்து அமருங்கள் என்று கூறினாலும் வரமாட்டார்கள்; அவர்கள் பலபேருக்கு நடுவிலே போய் அவர்களுடன் கலந்து உட்காருவார்களே தவிர முதலில் போய் அமர மாட்டார்கள். பேசுகிற போது கூட ஒரு பெண் பேசுவது போல் அடக்கமாகவும் அதிக உரக்கமில்லாமலும் பேசுவார்கள். நாணமுடையவர்கள்; மெல்லச் சிரிப்பார்கள்; ஒட்டகத்தின் மீது ஏறி வருகிறபோது கூட, இளைஞர்களை, முதியவர்களைக் கண்டால் தாம் இறங்கிக் கொண்டு, அவர்களை உட்கார வைத்து அழைத்துப் போவார்கள். இதுதான் மாந்தநேயம்.

அண்ணல் பெருமானார் அரேபியாவின் அதிபராக இருந்த போதும், ஒட்டுப் போட்ட சட்டையை அணிந்து கொண்டு இருந்தார்கள். ஒரு முறை அவர்கள் வெறும் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்து முதுகெல்லாம் கயிறுகள் அழுந்திக் கோடு கோடாகத் தழும்புகள் பதிந்திருந்த போது அவர்களின் தோழர்கள் அவற்றைப் பார்த்து, "உங்களுக்கு நாங்கள் ஒரு படுக்கையை வாங்கித் தருகிறோம், படுத்துக் கொள்ளுங்கள்; உடம்பெல்லாம்

இப்படித் தழும்புகள் அழுந்தியுள்ளனவே'' என்று குமுறிக் கூறினார்கள்,

அதற்கு அண்ணலார், ''இந்த உயிர் வாழ்க்கை என்பது ஒரு வழிச்செலவைப் போன்றது. இந்தப் பயணத்தில் ஒரு சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்வது போல இந்த உலக வாழ்க்கை எனக்குக் கிடைத்திருக்கிறது. வழிச் செலவு செய்பவன் மர நிழலில் தங்குவது போல இந்த உலக வாழ்க்கையைப் பெற்றிருக்கின்றேன். வழிச் செலவு செய்கிறவன் மர நிழலில் சிறிது நேரம் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டு புறப்படுகையில்,நிழலைச் சுருட்டிக் கொண்டு போக முடியுமா?'' என்று கேட்டார்கள்.

நபிகள் நாயகம் அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் தாம். உம்மி நபி என்று அழைக்கப் பெற்றவர்கள். ஆம், அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாதுதான். ஆனால், எழுதப் படிக்கத் தெரியாதவர்களெல்லாம் படிக்க வேண்டிய பாடமாக அவர்கள் வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் பெரிய மெய்யறிவுக் களஞ்சியமாக இருந்தார்கள். மெய்யறிவு என்பது வேறு; படிப்பறிவு என்பது வேறு. மெய்யறிவு என்பது காலங்காலமாக நிலைத்து நிற்கக் கூடிய கருத்துகளை உள்ளடக்கிப் பொதிந்து நிற்கும் அறிவாகும்.

புத்தருக்கு இன்றைக்குள்ள 10 அகவைப் பையனின் படிப்பறிவு இருக்காது. கணினியைப் பற்றிப் புத்தருக்குத் தெரியுமா? திருவள்ளுவருக்கு மின்னணுவியலைப் பற்றி என்ன தெரியும்? ஆனால், திருவள்ளுவருக்குக் கிருந்த மெய்யறிவு இன்றளவும் நாம் கருதத் தக்கதாய் இருக்கின்றது. புத்தருடைய மெய்யறிவு இன்றும் நாம் போற்றத் தக்கதாய் இருக்கின்றது. மெய்யறிவு வேறு; படிப்பறிவு வேறு.

நபிகள் நாயகம் மெய்யறிவால் நிரம்பிக் கிடந்தார்கள் என்பதால்தான் அவரே நாம் படிக்கத் தக்க பாடமாய் இருந்தார்கள். கல்வியைப் பற்றி அவரை விட அழகாக யாரும் கூறிடவில்லை. அற நெறிகளிலேயே இசுலாம் தான் கல்வி கற்க வேண்டியது கட்டாயம் என்று கூறுகிறது.

திருக்குர்ஆனில்'அல்கலம்'என்று, எழுது கோலின் பெயரால் ஓர் அதிகாரமே உண்டு. 'தெரியதவற்றையெல்லாம் இறைவன் எழுது கோலால் கற்பித்தான்' என்று அவ் வதிகாரம் தொடங்குகிறது. நபி அவர்கள் எல்லாருக்கும் ஒளி வீசுகிற மணி விளக்காக இருந்தவர்கள். ''தொட்டிலில் இருந்து இடுகாடு செல்லும் வரை, அறிவைத் தேடுங்கள்''என்று அவர்கள் கூறுகிறார்கள்; இறைவனை நோக்கி, 'இறைவா, என் அறிவை விரிவு செய்வாயாக' என்று வேண்டுவது, இசுலாம்;

பத்ரூப் போரிலே தோற்றுப் போனவர்களைப் பிடித்துக் கொண்டு வந்த போது, அந்த அடிமைகளில், தனக்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு ஓர் ஆள் தேவை என்று, நபிகளின் அன்பு மகளார் பாத்திமா நாச்சியார், தம் அன்புத் தந்தையைக் கேட்டார்கள்; தம்முடைய அருமை மகளுக்குத் திருமணமான போது,

மாவரைக்கும் ஒரு கல், மாவு போடும் ஒரு பை—இவற்றைத்தாம் திருமணச் சீராகத் தம் மகளுக்குத் தந்தார்கள்; நபிகள் நாயகம். அந்தக் காலத்தில் ஒன்றுமில்லாதவர் வீட்டுக்கு ஓர் எடுத்துக்-காட்டைச் சொல்ல வேண்டும் என்றால், நபிகள் நாயகத்தின் அருமை மகள் பாத்திமா நாச்சியார் வீட்டைத்தான் சொல்-வார்களாம்.

அதிகாரம், செல்வ வலிவு உடைய அராபிய அதிபதியாக விருந்த நபிகளாரின் மகளின் வீடு வறுமைக் கோலத்தில் இருந்-தது. நபி பெருமானிடம் மகள் கேட்கிறார். ''போர்க்களத்திலிருந்து பலரைத் தளைப் படுத்திக் கொண்டு வந்துள்ளீர்களே, என்-னுடைய வீட்டுக்கு வேலை செய்ய ஓர் ஆளைத் தந்து உதவக் கூடாதா? 'என்று! அந்த மக்களைத்தான் தம் மடி மீதும், மார்பு மீதும் போட்டுக் கொஞ்சிக் கொஞ்சிப் போற்றி வளர்த்தார்கள், பெருமனார் அவர்கள்.

அப்படிப் பட்ட மகள் தண்ணீர் இறைத்தும், மாவரைத்தும், காய்ப்புக் காய்த்து இருந்த கைகளைப் பார்த்துக் கண்ணீர் மல்கக் கூறுகிறார், நபிகள் நாயகம் ''மகளே! உனக்குத் தருவதற்கில்லை; தந்தையை இழந்த குடும்பங்கள் இருக்கும்; தனயனைப் பலி-கொடுத்த குடும்பங்கள் இருக்கும். அவர்களின் வீட்டுக்கு இவர்கள் உதவி செய்ய அனுப்பப் படுவார்களே தவிர, உனக்குத் தருவதற்கில்லை, மகளே! போய் ஆண்டவன் மீது சுமையைப் போட்டு விட்டு உன் வீட்டு வேலைகளை நீயே செய்'' என்று!

பத்ருப் போர் முடிவில் நம்முடைய கண்களைக் கலக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சி, இது! நபிகளுடைய பொறுமைக்கும் பெருமைக்கும் இன்னோர் எடுத்துக் காட்டு.

மக்காவில் அந்த நாளில் நபிகளுக்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது. ஓரிறைக் கொள்கையை நபிகள் வலியுறுத்தினார்கள். உருவ வழிபாட்டை எதிர்த்தார்கள். அதனால் அவற்றை விளங்கிக் கொள்ளாத பொது மக்கள், மதத் தலைவர்கள் நபி-களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

மக்காவில், நபிகள் போய் வருகின்ற வழியில் குடியிருந்த கிழவி ஒருத்தி, நாளும், தான் பெருக்கி வைத்திருந்த குப்பைகளை நபி-களார் மீது கொட்டுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தாள். அவள் திடீரென்று ஒரு நாள் குப்பை கொட்ட வரவில்லை. இப்படி ஏன் அவள் தன் பழக்கத்தை விட்டாள் என்று அறிந்து கொள்-வதற்கு, நபிகள் பெருமானார் அந்தம்மையார் வீட்டிற்குப் போய்ப் பார்த்தார்.

அந்த மூதாட்டி நோயினால் படுத்துக் கிடந்தாள். நபிகள் அவர் அருகில் அமர்ந்து அவளின் தலையைத் தடவிக் கொடுத்து, 'ஆண்டவன் உனக்கு விரைவில் நலனையும் நல் அருளையும் நல்கட்-டும்' என்று வேண்டினார்.

அந்த அகவையான மூதாட்டியின் கண்களிலிருந்து சொட்டு சொட்டாகக் கண்ணீர்த் துளிகள் வழிந்து விழுந்தன. அது போலும் மக்களின் அன்புக் கண்ணீரில் வளர்ந்ததுதான் இசுலாம்.

கஅபாவிலே ஏகப்பட்ட சிலைகள் இருந்தன. அந்தச் சிலைகளை-யெல்லாம் தம்முடைய அருமை மருமகனார் அலியின் தோள் மீது நின்று கொண்டு கோலினால் தட்டித் தட்டித் தகர்த்தார்கள். 'இவையெல்லாம் இறைவனல்லன்; மாந்தன் படைத்த உருவங்கள்; இவையெல்லாம் இறைவன் இல்லை'' யென்று நபிகள் உணர்ந்து, மக்களுக்கு எடுத்துரைத்தார்கள்

அவர்கள் ஒரு முறை கூறினார்கள், ''எல்லா நேரங்களிலும் தொழுது கொண்டிருப்பவனை விட, அவனுக்கும் சேர்த்து உழைக்கிறானே, அவன்தான் மிகச் சிறந்தவன்'' என்று.

ஒருவர் எப்பொழுது பார்த்தாலும் பள்ளிவாசலில் தொழுது கொண்டே இருக்கிறார். நபிகள் நாயகம் அவரைப் பார்த்தார். 'எப்படி இந்த ஆள் எப்போதும் எந்த நேரத்திலும் பள்ளிவாயிலில் இருக்கிறார்? சாப்பாட்டிற்கு என்ன செய்கிறார்? எப்படிச் சம்பாதிக்கிறார்?'' என்ற கேள்விகள் நபிகள் நாயகத்தின் மனத்தில் எழுந்தன. உசாவினார். அவருடைய தம்பி சம்பாதித்து இவருக்குத் தருகிறார் என்று விடை கிடைத்தது.

''இவரை விட இவர் தம்பியே சிறந்தவர். இவருக்கும் சேர்த்துச் சம்பாதிக்கும் இவருடைய தம்பியே மேலானவர். தொழுகையிலேயே முழு நேரமும் உட்கார்ந்து கொண்டு, அன்றாடத் தேவைகளுக்கு உரியதை உழைத்துப் பெற வேண்டும் என்னும் நினைவே இல்லாமல் மறந்து போயிருக்கும் இவரை விட, இவருடைய தம்பியே இறைவருக்கு விருப்பமானவர்'' என்றார் அண்ணலார்.

அவர் கூறிய இன்னொரு கருத்துரையும் கவனிக்கத் தக்கது. ''உழைப்பவனுக்கு ஊதியம் உடனே கிடைத்து விட வேண்டும்''. ''உழைப்பவன் வெயர்வை உலர்வதற்கு முன், அவர்களுக்குரிய ஊதியத்தைச் கொடுத்து விடுங்கள்''—என்பன போலும் அறிவுரைகள் தொழிலாளர் உலகின் மேல் அவர்கள் எத்துணை அக்கறை கொண்டிருந்தார் என்பதைப் புலப்படுத்துவன.

இவ்வாறான அறிவுரைகளை நாம் பார்க்கிற போதும் படிக்கிற போதும், நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கை எத்தகைய முன் மாதிரியான வாழ்க்கை, எவ்வாறு அது திறந்து வைத்த ஒரு பொத்தகமாக நம் முன் காட்சி அளிக்கிறது என்பது பற்றி நாம் வியக்க வேண்டி உள்ளது. அதில் ஒளிவு மறைவு இல்லை; புரியாத புதிர்களில்லை; மாய மந்திரங்களில்லை;சுவடிப்பு (புனைவு) வேலைகள் எதுவும் இல்லை. அஃது எளிமையான, தெளிவான, நீரோடை போன்ற ஒரு வாழ்க்கை என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

(இது பேரா: தமிழன்பன் அவர்கள் கடந்த 22-10-89 அன்று வேலூரில் நபிகள் நாயகம் அவர்களின் விழாவில் ஆற்றிய சிறப்புரை. இஃது 'என்னைக் கவர்ந்த பெருமானார்' என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது. வெளியீடு: இசுலாமிய நிறுவனம், 78, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை-12. 18 பக்: விலை 1.50.)

விழா!

ச. தமிழ்மல்லன்

''அந்த முனை வீட்டில் என்ன விழா? அமைச்சர்கள், துணை-வேந்தர், பெரிய பெரிய ஆட்கள் எல்லாரும் வந்திருக்கிறார்களே! உனக்குத் தெரியுமா? நமக்கு அழைப்பு வந்ததா'' என்று கேட்-டான் பச்சையப்பன், தன் மனைவியிடம்.

அவள், ''ஆமாங்க! அந்தப் பாண்டியன் இருக்கிறாரே, அவர் மகளுக்கு ஏதோ விழாவாம்! அதற்காகத்தான் கூட்டம் வந்துள்-ளது. அழைப்பை அதோ அந்த மிசைமேல் வைத்தேன்! இருக்-கிறதா பாருங்கள்'' என்றாள் பண்பழகி!

பச்சையப்பன் அதை எடுத்துப் பார்க்காமலேயே, ''என்ன அந்தப் பாண்டியன் பெண்ணுக்கு மஞ்சள் நீர் சுற்றுகிறார்களா? நீ போகவில்லையா?

''ஐயோ! அ’து இல்லீங்க; சரியா அழைப்பை எடுத்துப் பாருங்கள்!'' என்றாள் பண்பழகி!

அழைப்பை எடுத்துப் பார்த்தார் பச்சையப்பன்.

'அன்புடையீர், வணக்கம். எங்கள் மகள் பொற்கொடி, இளங்கலை வகுப்பில் மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறி-யிருக்கிறாள். கணிப்பொறி, அறிவியல் முதலிய பாடங்களில் 100% மதிப்பெண் வாங்கியிருக்கிறாள். சிறந்த மாணவியான எங்கள் செல்வ மகளுக்குப் பாரட்டு விழா ஒன்றை ஏற்பாடு செய்திருக்கி-றோம். அவ் விழாவில் கலந்து கொண்டு செல்வியை வாழ்த்துமாறு அன்புடன் வேண்டுகிறோம்.''

இடம்: எங்கள் இல்லம், பொன்னகம், மாலை 5.00 மணி;

குறிப்பு: தங்கள் குழநதைகளையும் தவறாமல் அழைத்து வருக!

அந்தப் புதுமையான அழைப்பைப் பார்த்து விட்டுக் 'கட' 'கட' வென்று சிரித்தான் பச்சையப்பன் ''இந்தப் பாண்டியன் எல்லாவற்றையும் புதுமையாகத்தான் செய்து காட்டுவார். நாம் மொட்டையடிப்பதற்கும் காதணி மாட்டுவதற்கும் விழா நடத்து-கிறோம். அவர் என்ன?'பிள்ளைகளைப் பள்ளிக் கனுப்பும் விழாவைக்' கொண்டாடினார்.' அவர் எதையும் செய்து காட்டி விடுகிறார்! ஊம்... அவர்க்கென்ன அவர்க்கு வாய்த்த துணைவியார் அப்படி! நல்லது எதுவானாலும் முதலில் அந்தம்மா வரவேற்கிறார்! முன்-னின்று துணை செய்கிறார்! நான் என்ன சொன்னாலும் செய்ய முடிவதில்லையே!'' என்று வருந்தினான்! பச்சையப்பன்!

''பண்பழகி, கிளம்பு! எங்கே நம்ம முடியரசன், முல்லை, முத்தமிழ்—அவர்களுக்கு நல்ல சட்டை போட்டுக் கிளப்பு! பாண்டியன் வீட்டுக்குப் போகலாம்! நேரம் ஆகிறது! என்றான் அவன்!

''இதோ பாருங்க...நான் வரமாட்டேன். நீங்க வேண்டு-மானால் போய் வாங்க! புதுமை செய்கிறாராம் புதுமை! பாண்டி-யன் புதுமை செய்யவில்லைங்க! நம்மையெல்லாம் குத்திக் காட்டு-

கிறார்! அவர்தாம் பெரிய அறிவாளி என்று நினைக்கிறார். இந்த ஊரைப்பற்றி அவர்க்குத் தெரியாதா? இங்கே யாரும் தங்கள் பிள்ளைகளைச் சரியாகப் படிக்க வைக்கவில்லை! அதுவும் பெண்கள் பத்தாம் வகுப்பு வரை படிப்பதே அரிது! வீட்டுவேலைக்கோ அல்லது தொழிற்பேட்டைக்கோ அனுப்பி விடுகிறார்கள். அவர் மட்டும் படிக்க வைத்து விட்டார். அதற்காக விழாக் கொண்டாடி நம்மை எல்லாம் முட்டாளாக்கலாமா?''

''என்னம்மா நீ பேசுவது? அவரைப் பற்றி நீ மிகவும் நல்லவர் என்று அடிக்கடி பேசுவாயே! இன்று என்ன பேசுகிறாய்? கிளம்பு போகலாம்!''

''நான் சொல்லி விட்டேன். என்னால் வர இயலாது!''

''வேலைக்குப் போய் அந்தப் பக்கமாய் வந்தேன். என்ன அழகான மேடை! என்ன ஒழுங்கு! அந்தப் பக்கம் வரும்போதே பூமணங் கமழ்ந்தது. அவரின் புகழ் மணம் போலவே அப் பூமணமும் இருந்தது! அங்கு வந்த வண்டிகளும் போக்குவரத்துக்குத் தொல்லையின்றி விடப்பட்டிருந்தன. நம்மை வரவேற்க அவர் வாயிலிலேயே காத்திருப்பார். கிளம்பு! கிளம்பு!'' என்று வற்புறுத்தினான் பச்சையப்பன்!

''நீங்கள் விரும்பினால் போய் வாருங்கள்! நம்மை இழிவு படுத்துகிற விழாவுக்கு நான் வர மாட்டேன். அது மட்டுமா? எனக்கங்கே என்ன வேலை? நலங்கு வைப்பதா? விருந்துண்ணுவதா? யாருடனும் கொஞ்சம் பேசவும் முடியாது! அமைச்சர்கள் மற்றவர்கள் எல்லாம் பேசுவார்கள்! 'உம்' மென்று உட்கார்ந்து நான் கேட்டுக் கொண்டு இருக்க வேண்டும்!''

''ஏன்'மா நீ இப்படிப் பேசுகிறாய்? நம் ஊரில் இப்படி நடப்பதற்குப் பெருமைப்பட வேண்டும். அந் நிகழ்ச்சிக்குப் போனால் நமக்குப் பெருமைதான் வரும்! நீ சொல்வது போல இழிவு வராது! நாம் பேசிக்கொண்டே யிருந்தால் அதற்குள் விழாவே முடிந்து விடும்! சரி, கிளம்பு!''

மீண்டும் 'பண்பழகி' தம் மறுப்புரையை வெறுப்புரையாய் ஆற்றிக் கொண்டிருந்தாள்!

முடியரசனும் முல்லையும் விரைந்தோடி வந்தார்கள். அப்பாவை அழைத்தபடி!

''அப்பா, அப்பா, நாங்கள் பொற்கொடி விழாவுக்குப் போயிருந்தோம். அங்கேதான் இந்தப் பை கொடுத்தாங்க. அழகான திருக்குறள் நூல் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள் அப்பா! திருமணங்களில் சிறுவர்களை ஒதுக்குவார்கள் இல்லையா? அங்கே அப்படியில்லை! வேடிக்கை பார்க்க ஓரமாக நின்று கொண்டிருந்தோம். பாண்டியன் மாமன் எங்களை முன்னால் அழைத்துக் கொண்டு போய் உட்கார வைத்தார். எத்தனையோ குழந்தைகள் அங்கே இருந்தனர்.'' விரைவுடன் சொன்னான் முடியரசன்.

''அமைச்சர்கள், அறிஞர்கள் எல்லாரும் பொற்கொடிக்குப் பரிசு கொடுத்தார்கள். அப்பா! எத்தனையோ பேர் பொற்-

(தொடர்ச்சி அடுத்த பக்கம்

பயனுள்ள மருத்துவக் குறிப்புகள்.

ஃ ஒருவருடைய எடை அவர் உயரத்துக்கும் அகலைக்கும் தக்க-படி இல்லாமல் எத்தனை விழுக்காடு அதிகமாக உள்ளதோ அத்தனை விழுக்காடு அவருக்கு இறக்கின்ற வாய்ப்பு அதிகம் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

ஃ கோழி, புறா, மான், முயல் இவற்றின் புலாலை உண்பவர்-களுக்கு மாரடைப்பு நோய் வருவதில்லை.

ஃ கொழுப்பு நிறைந்த உணவுப் பொருள்களால் மாரடைப்பு நோய் வருவதற்கு வாய்ப்பு நிறைய உள்ளது. புலால், முட்டை, நெய், வெண்ணெய், தேங்காய், வாதுமைப் பருப்பு, முந்திரிக்கொட்டை முதலியவற்றில் கொழுப்பு (கொலாஸ்-டிரால்) அதிகம் உள்ளது.

ஃ வெள்ளைப்பூண்டு, மஞ்சள், பச்சைவெங்காயம் இவற்றில் கொழுப்பைக் கரைக்கும் சாரப்பொருள் உள்ளது. முட்டை-யின் மஞ்சள் கருவில் கொழுப்பு அதிகம் உண்டு. வெள்ளைக் கருவில் இல்லை. பாலாடை நீக்கிய பால், வெண்ணெய் நீக்கிய மோர் இவற்றில் கொழுப்புப் பொருள் இல்லை. தயிரிலும் கொழுப்பு இல்லை. மாறாக, தயிரில் கொழுப்பைக் கரைக்கும் பொருள் உள்ளது என்று அண்மை ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஃ விளாம்பிசினை ஆவின் பாலில் ஊற வைத்துக் கொஞ்சம் சர்க்-கரை சேர்த்துக் கொட்டைப்பாக்கு அளவு நாள் தோறும் உண்டு வந்தால் நரம்புத்தளர்ச்சி நீங்கும்.

ஃ தேன் சாப்பிட்டால் புற்று நோய் வராது. இது தவிர தேன் களைப்பு, கண் தொடர்பான நோய்கள், தொண்டை நோய், சளி பிடித்தல் முதலியவை தேன் சாப்பிடுவதால் வருவதில்லை.

ஃ நெல்லிக்காயை வாயில் போட்டு மென்று, அதில் ஈறுகளைத் தேய்த்து வந்தால், பயோரியா என்னும் கொடிய பல் நோய் படிப்படியாக நீங்கி விடும்.

ஃ எள்ளைத் துவையலாக அரைத்து அடிக்கடி உண்டு வந்தால் கரு வளர்ச்சி ஏற்படுவதில்லை. இயல்பான குடும்பக் கட்டுப் பாட்டுக்கு ஏற்ற முறை இது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

கொடியைப் பாராட்டினார்கள்'' என்றாள் முல்லை.

''எல்லாரையும் விடத் துணைவேந்தர்தாம் பெரும் பரிசு கொடுத்தார்!'' என்றான் முடியரசன்.

''என்னப்பா, பெரிய பொருளாக அவர் கொடுத்தாரா?''

''இல்லையப்பா, அது பெருமைப்படத்தக்க ஒரு பரிசு!''

''நாளைமுதல் எங்கள் பல்கலைக் கழகத்தில் கணிப்பொறி-நெறியாளராகப் பொற்கொடிக்கு இதோ அமர்த்தாணை கொடுக்-கிறேன்!' இதுவே நான் தரும் பரிசு!'' என்றாரே பார்க்கலாம். எல்லாரும் ஒரேயடியாகக் கை தட்டி விட்டார்கள்! பொற்-கொடியாலேயே நம்ப இயலவில்லை! அனைவரும் வியப்புடன் மகிழ்ந்தனர். நீங்கள் வரவில்லையே!''. O

ஃ சரியாகத் தூக்கம் வராமல் தொல்லைப்படுபவர்கள் இரவில் படுக்கு முன் இரண்டு தேநீர்க் கரண்டி அளவுள்ள கசகசாவை அரைத்து அல்லது பொடிசெய்து காய்ச்சிய பாலில் கலந்து உண்டால் நல்ல தூக்கம் வரும். உடம்புக்கும் நல்ல வலிவை இது தரும்.

ஃ ஓரளவு வெங்காயத்தைப் பச்சையாக நாள் தோறும் உண்டு வந்தால் குரல் வளம் நன்றாக இருக்கும். வெங்காயத்தில் ஏற்படும் கதிர் வீச்சால் உடலுக்கு மிக வலிமை ஏற்படுகிறது என்று மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. உருசியாவில் 100 ஆண்டிற்கு மேல் வாழ்பவர்கள் தங்கள் உணவில் வெங்காயத்தை மிகுதியாய்ச் சேர்த்துக் கொள்பவர்களாக உள்ளனர் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். கடுமையான தலைவலி உள்ளவர்கள் பச்சை வெங்காயத்தை அரைத்துக் கால் பாதங்களில் அழுத்தித் தேய்த்தால் தலைவலி குணமாகும். வெங்காயச்சாற்றையும் தேனையும் சம அளவில் கலந்து கண்களில் விட்டு வர கண்வலி, கண் தளர்ச்சி, கண் மங்கல் ஆகியவை நீங்கும். சளி பிடித்து மூக்கு ஒழுகுபவர்கள் வெங்காயத்தை நசுக்கி அதை மூக்கில் உறிஞ்சி வந்தால் விரைவில் குணமடையலாம். வெங்காயத்தைப் பச்சையாக மென்று பற்களிலும் ஈறுகளிலும் தேய்த்தால் பல் தொடர்பான அத்தனை நோய்களும் நீங்கும். எயிறு வீக்கம் உடனே கரைந்து போகும். வெங்காயச்சாற்றையும் கடுகு எண்ணெயையும் சம அளவு கலந்து கால் மூட்டுகளில் இலேசாக அடிக்கடி தேய்த்து விட்டு வந்தால், மூட்டுவலி குறைந்து போகும்.

ஃ இலவங்கப் பட்டையை ஓரளவு நாள் தோறும் காலையில் வெறும் வயிற்றில் உண்டு வந்தால் நல்ல நினைவாற்றல் உண்டாவதுடன், நாள் பட்ட இருமல், விக்கல், விரைகளில் வலி. விரை வீக்கம் முதலியவை குணமாகும்.

ஃ மொச்சைக் கொட்டையை இடித்துச் சலித்து எடுத்த மாவில் ஆவின் பால் விட்டுக் குழைத்து முகத்தில் இரவில் தேய்த்துப் பூசி, விடியலில் கழுவி வந்தால், முகம் மிகவும் பள பளப்பாக இருப்பதுடன், முகத்தில் உள்ள தழும்புகள், தேமல், காய வடுக்கள், பருக்கள் இவை நீங்கி முகம் ஒளி பொருந்தியதாக இருக்கும். புதிய முறையில் வந்துள்ள முகப் பூச்சுக் களிம்புகள் தேவையில்லை. அவற்றால் முகத்துக்கு நன்மையை விடக் கேடுகளே அதிகம்.

ஃ சவுக்கு மர இலைகளில் சிறிதளவை வாயிலிட்டு மென்று, சிறிது நேரம் பல்வலி, எயிறு வீக்கம் உள்ள இடத்தில் அடக்கிக் கொண்டிருந்தால் விரைவில் வலி நீங்கிக் குணமடையலாம். சவுக்கு இலையை நசுக்கிச் சாறு பிழிந்து காடியில் கலந்து அதைத் தலை முடியில் அடி வரை நன்கு தடவி ஒரு மணிநேரம் வைத்திருந்து கழுவி வர, விரைவில் பழுப்பு நிற முடியும், இள நரையும் தவிர்ந்து, முடி கருப்பாகி வருவதுடன், முடி கொட்டுவதும் அறவே நீங்கும்.

பணிவும், அடிமையும்!

-அதியமான்.

பணிவு, பணிவிடை, அடிமை ஆகிய முச் சொற்களின் பொருள்களை ஆழ்ந்து சிந்தித்தால்தான் ஒவ்வொன்றுக்கு முரிய வேறுபாடுகள் புரியும். இம்மூன்று சொற்களையும் மேலோட்டமாக கூறிக் கொண்டு, அதன் உள் கருத்தைப் புரிந்து கொள்ளாமல், ஒன்றின் பொருளை மற்றொன்றின் பொருளாகக் கொண்டு மயக்கமுறுகின்றனர். இச் சொற்களின் இயக்கங்களில் பணிவு என்பது வேறு, பணிவிடை என்பது வேறு, அடிமை என்பது வேறு. இம் மூன்றின் வழியில் இயங்குவோர் தெளிவான பொருளை உணராமல் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இம் மூன்றின் வேற்றுமை சுட்டும் பொருள் அறியாது பேசுகிறார்கள். அவ் வியக்கப் பொருளைத் தெளிவாக ஆய்ந்து கொள்ளுதல் முகாமையாகும்.

பணிவு: இவ்வுணர்வு மாந்தர்களுடைய வாழ்வில் முகாமையானது. மேலும் இ'து ஒரு சிறந்த பழக்கமும் கூட. தாய், தந்தை, ஆசிரியர், பெரியோர், அறிஞர் ஆகியோரிடம் நடந்து கொள்ள வேண்டிய முகாமையான பழக்கம் யாவரிடமும் இருக்க வேண்டிய பண்பாகும். பணிவுடையார், வாழ்க்கையில் உயர்வர்; மேலும் அவரை யாவரும் விரும்புவர்; அன்பும் காட்டுவர். செல்வர் முதல் ஆண்டிவரை பணிவுடையாராக இருத்தல் வேண்டும்; அது நன்மைகளை நல்கும். பேராசான் வள்ளுவரும்,

> எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
> செல்வர்க்கே செல்வந் தகைத்து.

என மொழிகிறார். இதன் பொருளைக் கூர்ந்து கவனித்தல் இன்றியமையாதது. பணிவுடையாராக நடந்து கொள்ளுதல் வறியர், செல்வர் ஆகிய அனைவருக்கும் வேண்டுவதாகும், செல்வருக்குப் பொருளோடு அழியாச் செல்வத்தையும் தரும் எனவும் வள்ளுவர் கூறுகிறார். செல்வர் என்றால் பொருள் வைத்திருப்போரை மட்டும் எண்ணல் சரியன்று; அறிவுச் செல்வரும் செல்வரே. பொருள் செல்வரைவிட, அறிவை மதிப்போர் வாழும் நாட்டில் அறிவுச் செல்வர்க்கே மதிப்பு மிகுதியாக உண்டு. அவரைக் கண்ட இடத்திற் பணிதல் சிறப்பைத் தரும். அறிவுடையார் மிகுதியாக எளியோராகவே காட்சி தருவர். செல்வத்தை மதிக்கவும் செய்யார்.

○ தமிழறிஞர் பெரியசாமி தூரனை ஆசிரியராகக் கொண்டு தமிழக அரசு, தமிழில் வெளியிட்ட 10 பாகங்களைக் கொண்ட சிறுவர் கலைக் களஞ்சியத்தின் படிகள், வாங்குவோர் இல்லாமல் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பண்பாட்டு நடுவக் கூட்டத்தில் தூசி படிந்து கிடக்கின்றன. இந்திய மொழிகளிலேயே சிறுவர்களுக்காக உருவாக்கப்பட்ட கலைக் களஞ்சியம் இது. பல வண்ணங்களில் அழகாக அச்சிடப்பட்ட இந்த 10 பாகங்களைக் கொண்ட கலைக் களஞ்சியத்தின் மொத்த விலை 500 உருபாவாகும்.

தமிழ் பாடும் புலவர் கீரனுர் எளிமையான தோற்றம் உடையவர். அவரது வாழ்க்கையும் எளிமையானதே. அவர் பரிசில் பெற, தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையைக் காண வருகிறுர். அரண்மனையில் அரசன் இல்லை, உள்ளிடங்களில் உலா வருங்கால் முரசுக்கட்டில் வெற்றிடம். புலவர்க்கோ அயல்வழி நடந்த களைப்பு. உறக்கம் வர அம் முரசுக்கட்டிலில் படுத்து உறங்கி விடுகிறுர். முரசையோ, அதன் இருக்கையையோ, தொடுவதோ அல்லது அப் பக்கஞ் செல்வதோ, தண்டனைக்குரிய குற்றமாகும். அப்படித் தொட முடியாத அக் கட்டிலில் புலவர் உறங்கி விடுகிறுர். அரசன் வந்து அவ்வறிவுப் பாவலர் உறங்குவது கண்டு, இரக்கம் கொண்டு, விசிறி (கவரி) எடுத்து நன்கு உறங்கி விழிக்கும் வரை வீசினுன். புலவர் எழுந்து இச் செயல் கண்டு பருண்டார். ஆயின் தமிழ் மருளாதே; பாடுகிறுர்.

"...நற்றமிழ் முழுது அறிதல்
அதனெடும் அமையாது, அணுக வந்து நின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசியோயே......... (புறம் 50)

நாட்டை ஆளும் அரசன், எதிர்த்தோரை வெல்லும் வீரங்கொண்ட வேங்கை, குற்றங்கடியும் நற்றமிழ் வேந்தன், எளியரான புலவரைப் பணிகிறுர். அறிவுடை ஒருவரை அரசும் விரும்பும் அல்லவா? எனவே அரசன் புலவரைப் பணிந்தான். அது பணிவுடமை. அக் காலத்தில் போலிப் புலவர்கள் கிடையாது. எனவே நாட்டுத் தலைவர்கள்தாம் புலவர்களை மதித்தனர். இக் கால் போலிப் புலவர்கள் மிகுதியாக இருப்பதால் புலவர்கள் தாம் தலைவர்களைப் புனைந்து போற்றி வாழ்கிறுர்கள்.

பணிவிடை: சந்தனம் கட்டையாக இருக்கும் போது அதன் மணம், குணம் தெரியாது. அதை எடுத்து அரைத்து அதன் குழம்பை எடுத்துப் பூசிய பின்னரே மணம்,குணம் தெரியும். பணிகிறேன் என நகைமுகத்துடன் பணிய நடித்தலும் உண்டு. எனவே உண்மைப் பணிவிற்குப் பணிவிடை வேண்டும். அஃதே அப் புலவருக்கு அரசன் கவுரி வீசியது. பணிவுக்கு அவன் வீசி நின்றது விடையாக அமைந்தமையால் தான் அதைப் பணிவிடை எனக் கூறுகின்றுன் தமிழன். செயலற்ற பணிவு பணிவாகாது. எனவே. தான் பணிவிடையாகத் தலை தாழ்த்தி வரவேற்றல், இன் முகங்காட்டல், விருந்தோம்பல், அன்பு பாராட்டல், செருக்கறல், உயர்ந்தோரிடை தாழ்தல், கட்டளை மேற் கொள்ளல், பின் பற்றல், தகுதி போற்றல், பணிவாகப் பேசுதல், செயலால் மகிழ்வித்தல், போன்றவை பணிவிடைகளாம். பணிவிடை இல்லாப் பணிவு உண்மைப் பணிவு எனக் கொள்ள இயலாது. பணிவுடையான் என்பதை அறியப் பணிவிடையே சான்றுக அமைந்துள்ளது.

அடிமை: பணிவுச் செயலையும், அடிமை வாழ்வின் செயலையும். ஒன்றெனக் கொள்ளக் கூடாது. இரண்டும் ஒன்றுபோல் தோன்-

றும். ஆனால் பணிவுடைமைச் செயல்களை அடிமைச் செயல்களாகவோ, அடிமைச் செயல்களைப் பணிவுடைமைச் செயல்களாகவோ கொள்ளல் முடியாது. பணிவுடையானுக்கு மானம் இருக்கும். அடிமையாக வாழ்பவனிடத்தில் மானமிருக்காது. மானமே குடிப் பெருமையை உயர்த்தும். எனவே எந்த நிலையிலும் மானத்தை விட்டு விடலாகாது. எனவே திருவள்ளுவப் பெருந்தகையும்,

பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு

—என்பார். செல்வம் இருக்கும் போது பணிதல் வேண்டும். செல்வம் குறைந்தாலும் உயர்வைத் தரும் மானத்தை விட்டு விடக்கூடாது. கொள்கையில் உறுதியோடு இருப்பவர்கள் செல்வத்தைக்கூட மதிக்க மாட்டார்கள். மதிப்பைக் காத்துக் கொள்ளத் தன்மானத்தை விட்டுக் கொடுக்க மாட்டார்கள்; உயிரே போனாலும் மானத்தைக் காக்க அடிமையாக மாட்டார்கள். பதவி பணம் ஆகிய தன்னுகர்ச்சிப் பொருள்களுக்காக ஒருவனிடம் பணிவது போலத் தோற்றமளிக்கும் நிகழ்ச்சியே அடிமை என்பது. அடிமைக்கு விளத்தத்தை சுந்தரனார் மனோன்மணியம் நாடக நூலில் மிகத் தெளிவாகக் காட்டுகிறார். சீவக மன்னனின் அமைச்சன் குடிலன் என்பான் பல சூழ்ச்சிகளைச் செய்து, அவனை முழுவதுமாக நம்பியிருக்கும் அம் மன்னனை வீழ்த்தி நாட்டின் அரசுரிமையைக் கைப்பற்ற எண்ணிய போழ்து, சீவகனோடு போர் புரியும் சேரன் புருசோத்தமனிடம் பேசுகிறான்.

''அடியேன் அடியேன் குடிலன் அடிமை'' எனப் பதவிக்காக மானமின்றி தன்னை அவனுக்கு அடிமையென்று கூறிப் பதவியை இரக்கிறான். நன்றி கெட்ட குடிலன் தன்னை நாயேன் எனவும் கூறி இழிந்தவனாக அடிமையாகிறான். இவனைப் போன்ற ஓர் அடிமை இராவணன் தம்பி வீடணன்(விபீசணன்). இந்த அடிமை தனக்கு எடுத்துக் காட்டாக வீடணனைச் சுட்டுகிறான்.

''வென்றதோ ரிலங்கை விபீஷணன் காத்தவா
நின்று நீ வென்றா நா டினிது காத்திடுவேன்,

வீடணனைப் போல நீ வென்ற நாட்டைக் காத்திடுவேன் என்று அக் குடிலன் மண்டி இடுகிறான். ஓர் அடிமை இன்னொரு அடிமையைத்தான் தனக்கு எடுத்துக் காட்டாகக் கூறுவான்.

மானம் போனால் உயிரை விடும் பண்புள்ள தமிழர்கள் கூட்டத்தில் இப்படியும் அடிமைகள் வாழ்கிறார்கள், எனவே புருசோத்தமன் குடிலனைப் பார்த்து ''வாயை மூடு சேரன் வெற்றியையும் திருட யாட்டான்'' என்று கூறி குடிலனுக்கு விலங்கிட்டு அழைத்து செல்லுகிறான்.

குடிலன் புருசோத்தமனிடம் பணிவதைப் பணிவுடைமை என எண்ணலாகாது. அது பணிவுடைமை போன்று காட்சித் தந்தாலும் அடிமை வாழ்வே அது. அடிமை வாழ்வில் கிட்டும் இன்பமும் இழிவானதே. அவனுடைய புகழுக்குக் கிடைத்த

இழுக்கு அவனுடைய வரலாற்றில் இழிவைக் காயமாகத் தந்து நிற்கும்.

தனக்கு இன்ப வாழ்வைப் பெறுவதற்காக ஒருவனிடம் அடிமையாக வாழ அவனுடைய கால்களைத் தொட்டு வணங்குதல், அவன் ஏவும் இழிவான பணிகளைச் செய்தல், தான் நுகரும் இன்பங்களைக் கூட அவனுக்கு அடிமையாக்கி விடுதல், தன்னுடைய அடிமை வாழ்க்கை நிலைத்திருக்க தன் இனத்தைக் காட்டிக் கொடுத்தல், தனக்கு இருக்கும் உரிமைகளையும் பிறனுக்கு உடமையாக்கி விடுதல், பிறனிடம் அடிமையாய் இருக்க பிறனிடம் இல்லாத வலிமைகளைப் புனைந்து அளவிற்கு மீறிப் புகழ்தல், தன் வலிமையை இழத்தல் போன்ற இழிவான பணிவுச் செயல்களைச் செய்தல். இப் பண்புள்ளவர்களால்தான் நாடும் அடிமையாகி விடுகிறது. இவர்களை முதலில் களை எடுக்காமல் ஒரு நாட்டை அடிமை வாழ்விலிருந்து மீட்டெடுக்க முடியாது. அவ் வகை செய்யாத இராவணனும், கட்டபொம்மனும் அழிந்தனர் என்பதை நினைத்துச் சிந்திக்க வேண்டும். பணிவிடை மூலம் பணிதல் நல்ல பண்பு. நாகரிகமும் ஆகும். பணிவுடைமை போலக் காட்சிதரும் அடிமை வாழ்வு இழிவையும் தந்து, தான் சார்ந்துள்ள இனத்தையும் இழிவு படுத்தி விடும். அழியாத இழுக்குக்கு அடிமை வாழ்வு வழி வகுக்கும். எனவே வேண்டாம் நமக்கு அடிமை வாழ்வு!

○ சென்னை, தியாகராய நகர், ஆர்க்காடு முதலி தெருவிலுள்ள ம.கோ.இரா.(எம்.சி.ஆர்)—இன் வீடு அவருடைய நினைவில்லமாக உள்ளது. அதில் அவருக்கு அளிக்கப் பெற்ற 600க்கும் மேற்பட்ட பரிசுப் பொருள்கள் பாதுகாப்பாக 2500 சதுர அடிப்பரப்பில், கண்ணாடிப் பேழைகளில் வைக்கப்பெற்றுள்ளன.

அவற்றுள் முகாமையான பரிசுப் பொருள்கள் வெள்ளி மரத்தில், தங்கத்தால் செய்யப் பெற்ற,இதயக்கனி' என்னும் மாம்பழம், அவரணிந்திருந்தத் தொப்பி, கறுப்புக் கண்ணாடி, மணிக்கட்டில் சட்டைக்கு மேல் அவர் அணிந்திருந்த அகல்மான பட்டையுடன் கூடிய 'சைக்கோ' கடிகாரம், 5 அடி உயரக் கோப்பை, வெள்ளி முலாம் பூசப் பெற்ற அவரின் அன்னையின் உருவம் பொறித்த பரிசு, மிகப் பெரிய மாழையிலான சக்கரம், 'அடிமைப் பெண்' திரைப் படத்தில் அவர் சண்டையிட்ட அரிமா (சிங்கம்) பாடம் செய்யப் பெற்ற உருவம் (இந்த அரிமாவை 12 ஆண்டுகள் அவர் வளர்த்தார்), அவர் பயன்படுத்திய உடற் பயிற்சிக் கருவிகள், எடை பார்க்கும் கருவி, அவர் திரைப்படத்தில் பயன்படுத்திய வாள்கள், மரப் பொருள்கள், கம்பளங்கள், பொத்தகங்களுடன் கூடிய பொத்தகப் பேழைகள், ஏராளமான புகைப்படங்கள், அவர் பயன் படுத்திய TMX4777 எண்ணுள்ள மகிழுந்து, அவருக்கு நேரு, இராதா கிருட்டிணன், அண்ணா, இராசாசி, கருணாநிதி போன்றோர் எழுதிய பாராட்டுக் கடிதங்கள் — முதலியவை ஆகும்.

தாருங்கள், தருக என்னும் சொற்களாலும், தன்னை விடக் கீழான நிலையில் உள்ள ஒருவனிடமிருந்து பெறும் பொழுது கொடு, கொடுங்கள், கொடுக்க—என்னும் சொற்களாலும் கூறிப் பெறவேண்டும் என்பது தமிழ் மரபாகும்.

பிரிட்டிசு ஒலிபரப்பு என்னும் பி.பி.சி. ஒலிபரப்பு (பிரிட்டிஷ் பிராடு காஸ்ட்டிங் (British Brodcasting) ஆங்கிலத்திலும், மற்றும் உலகின் 36 மொழிகளிலும் ஒலிபரப்புகளை நடத்துகிறது. இங்கு 1941-ஆம் ஆண்டில் தமிழோசை என்னும் பெயரில் தமிழ் ஒலிபரப்பு தொடங்கப் பெற்றது. தொடக்கத்தில் கிழமைக்கு ஒரு நாளில் மட்டும் தமிழில் ஒலிபரப்பு நடந்தது. இப்பொழுது கிழமையில் 6 நாள்கள் தமிழ் ஒலிபரப்பு நடை பெறுகிறது.

தமிழக அரசு ஆண்டுக்கு ஐந்து முறை, திருவிழா நாள்களில் ஏழை மக்களுக்கு 5 மாத்திரி (கிலோ) அரிசி இலவயமாக வழங்கப் பெறும் என்று ஆரவாரத்துடன் கவர்ச்சியுடன் அறிவிக்கப் பெற்ற இலவய அரிசித் திட்டம் ஓராண்டுக்குப் பின், ஏதும் சந்தடியில்லாமல் 90 அக்டோபர் முதல் கை விடப் பெற்றது.

இன்றைய நிலையில் சென்னை நகரில் உள்ள மக்களின் வருமான விழுக்காடுகள் கீழ்வருமாறு.

உருபா 400 வரை வருமானம் உள்ளவர்கள்			22.1%
,, 400 முதல் 800	,,	,,	33.4%
,, 800 ,, 1500	,,	,,	28.3%
,, 1500 ,, 2500	,,	,,	9.9%
,, 2500க்கு மேல்	,,	,,	6.3%

என்று ஒரு புள்ளி விளக்கம் கூறுகிறது.

இந்தியாவில் 1986-ஆண்டுக் கணக்கின் படி உள்ள மாடுகள் ஏறத்தாழ 20.14 கோடி. எருமைகள் 7.57 கோடி. வெள்ளாடுகள் 11.10 கோடி. செம்மறியாடுகள் 5.20 கோடி என்று கணக்கிடப் பெற்றுள்ளன.

கன்னியாகுமரியில் ஏறத்தாழ 6 கோடி உருபா செலவில் 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை வைக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. இச் சிலையை வடிக்கும் பொறுப்பு தலைமைச் சிற்பி கணபதி அவர்களிடம் ஒப்புவிக்கப் பெற்றுள்ளது. இந்தப் பணி கடந்த செப்-6 இல் தொடங்கியது.

அடுத்த 21-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலக மக்கள் தொகை 1100 கோடியாக இருக்கும் என்று உலக ஒன்றிய நிறுவனம் மதிப்பீடு செய்துள்ளது. இத் தொகை 1400 கோடியாகக் கூட ஆகலாம் என்றும் அது கருத்துக் கூறியுள்ளது. இன்றைய உலகின் மக்கள் தொகை 530 கோடி. அதுமட்டுமன்றி வருங்காலத்தில் பயிரிடும் நிலப் பரப்பும் குறைந்துவிடும். இப்பொழுதுள்ள பயிரிடும் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியிலேயே அடுத்த நூற்றாண்டு மக்கள் பயிர் செய்யவேண்டியிருக்கும் என்றும் அதன் அண்மை அறிக்கை கூறுகிறது.

உருளைக் கிழங்கில் பச்சை நிறமிருந்தால் அஃது உண்ணத்தகாத கிழங்காக ஒதுக்கல் வேண்டும். அப் பச்சை நிறக் கிழங்கு நச்சுத் தன்மை உடையது.

1989-ஆம் ஆண்டு மார்ச்சு 31-ஆம் பக்கலின் நிலவரப்படி இந்திய அரசுக்கு உள் நாட்டுக் கடனுகை உருபா. 2,03,726 கோடி என்றும், வெளிநாட்டுக் கடனுகை உருபா 68,831 கோடி

என்றும் பொருளியல் துறையமைச்சர் மதுதண்டவதே பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்;

ஃ பரம்பரையாக வன்முறைக் குற்றவாளிகள் என்று ஊரறிந்த, உலகறிந்த குற்றவாளிகள், கொலை, கொள்ளை, கற்பழித்தல் போன்ற குற்றங்களைச் செய்த குற்றவாளிகள் 40 பேர்கள் பீகார் மாநிலச் சட்ட மன்றத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்; இந்தியாவில் உள்ள அரசியல் நிலைமைக்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

ஃ உலகில் ஏறத்தாழ 70 கோடிப் பேர் கல்வியறிவு பெறாதவர்கள். அவர்களில் மூன்றில் இரு பகுதியினர் பெண்கள்.

ஃ இதுவரை வெளிநாடுகளிலிருந்து விண்ணுக்கு அனுப்பப் பெற்ற இந்திய செயற்கைக் கோள்கள் 9; அவற்றின் விளக்கம்: அவை செலுத்தப் பெற்ற நாடுகளின் பெயர்கள்.

1)	ஆரிய பட்டா	1975	ஏப்-9. உருசியாவிலிருந்து;
2)	பாசுக்கரா 1.	1979	சூன்-7. ,, ,,
3)	ஆப்பிள்	1981	கூருவிலிருந்து (பிரஞ்சு கயானா);
4)	பாசுக்கரா-11;	1981	நவ-20. உருசியாவிலிருந்து.
5)	இன்சாட் 1.ஏ;	1982	ஏப்-10. அமெரிக்காவிலிருந்து;
6)	இன்சாட் 1.பி;	1983	ஆக-30 ,, ,,
7)	ஐ.ஆர்-எசு.1.ஏ;	1988	மார்-19 உருசியாவி ,,
8)	இன்சாட் 1-சி;	1988	சூலை-22. கூருவி ,,
9)	இன்சாட் 1.டி.	1990	சூன்-20 அமெரிக்காவி ,,

○ ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன், பயணிகளில் 65 விழுக்காட்டுப் பேர் தொடர் வண்டிகளிலும், 35 விழுக்காட்டுப் பேர் பேருந்துகளிலும் பயணம் செய்தனர். ஆனால், இப்பொழுது 87 விழுக்காட்டினர் பேருந்துகளிலும், 13 விழுக்காட்டினரே தொடர் வண்டிகளிலும் பயணம் செய்வதாகக் கணக்கிடப் பெற்றுள்ளது.

○ முன்பெல்லாம் பேருந்துகளில் இத்தனைப் பேர்களைத்தான் ஏற்றிக் கொள்ளலாம் என்று நெறி (விதி) இருந்தது. உட்கார்ந்து செல்பவர்களுடன் 15 பேர்தான் நின்று கொண்டு போகலாம் என்று அப்பொழுது வரையறை செய்யப்பெற்றிருந்தது. ஆனால், பின்னர் அந்த நிலை மாற்றப்பட்டு, அரசுக்குச் சொந்தமான பேருந்துகளில் எத்தனைப் பேர்களும் ஏற்றப்படலாம் என்று நெறி செய்யப்பட்டது.

வானொலியில் செய்யப் பெறும் வணிக விளம்பர ஒலிபரப்பின் மூலம் ஆண்டுக்கு ஏறத்தாழ 30 கோடி உருபாவும், தொலைக்காட்சி விளம்பரங்கள் மூலமாக ஆண்டுக்கு ஏறத்தாழ 150 கோடி உருபாவும், நடுவண் அரசுக்கு வருமானமாகக் கிடைக்கிறது.

○ இந்தியாவில் தற்போது 100 வானொலி நிலையங்கள் உள்ளன;

○ ஒரு 'லக்ஸ்' வழலையை உருவாக்கும் செலவு உரு 1.07 ஆகிறது; ஆனால் அது உரு 5.50க்கு விற்கப்படுகிறது. ஒரு 'சிபாகா' பல்துாரிகை (டூத் பிரஸ்) உருவாக்கச் செலவு 1.03 ஆகிறது; ஆனால் அது உரு 3.50க்கு விற்கப்படுகிறது; இப்படித் தொழில் துறை முதலாளிகள் தாங்கள் உருவாக்கும் பொருள்களுக்கு 5 அல்லது 6 மடங்கு விலை வைத்து விற்கிறார்கள்;

○ இந்தியாவில் ஓராண்டுக்குத் துணிகளை வெளுக்கும் சவர்க்காரம் (சலவை சோப்) 2000 கோடி உருபாவுக்கும், குளிக்கும் வழலை 1000 கோடி உருபாவுக்கும் விற்பனை ஆகின்றன;

தென்மொழி மின் அச்சகம், சென்னை 600 005. (தமிழகம்)